தளம்
THALAM

தளத்தின்

# விருட்சம்

கிளை – 2025
துளை –12




150/=

தளம்
THALAM

# தளத்தின் விருட்சம்

கிளை - ௨௦௨௫
தளை - ௧௨

## உள்ளே!........


- ஆசிரியர் உரை
- குறுக்கெழுத்து புதிருக்கான விடைகள்

1. பட்டதாரிகளின் இன்றைய நிலை.
2. பட்டதாரியின் குரல்
3. விஞ்ஞானத்துறை பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பு
4. கனவுகள் மறைவதில்லை
5. பட்டம் பெற்ற பின்னர்.....
6. பட்டதாரி எனும் முகமூடிக்குள்
7. வராதோ ஒரு பொழுது
8. உங்கள் நேரம் வரும்
9. தனிமையில் வெளியூர் பல்கலைக்கழக இரவு
10. தளத்தின் பயணங்கள்
11. இளம் வரைகலை
12. வெற்றிடமான கனவுகள்
13. பட்டதாரியின் சவால்கள்
14. சு.மருத்துவர்களின் இன்றைய நிலை
15. பல்கலைக்கழக நட்பு
16. பட்டதாரி
17. இலங்கையும் இன்றைய பட்டதாரிகளும்
18. ஊதாரி பட்டதாரி
19. கண்ணியவான்
20. மனநலம் - ஒரு பார்வை
21. எழுத்துச்சதுரங்கம்




# ஆசிரியர் உரை



என் அன்பார்ந்த தோழமைகளே!

கடந்த ஆறாண்டுகளாக சமூக நலனுக்காக அர்ப்பணிப்புடன் இயங்கி வரும் தளம் அமைப்பின் ஒருங்கிணைப்பில், 2024 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கும் "விருட்சம்" மாத இதழின் தலைமை ஆசிரியராக உங்களுடன் பயணிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இம்மாத இதழானது பசுமை கனவுகளை தழுவிய இளையோரின் கைவண்ணங்களும், பல்வேறு அனுபவங்களால் வலுப்பெற்ற மூத்தோரின் கலைச் சாயல்களும் கலந்த படைப்பாகும். இவ் இதழானது கல்வியின் உயரிய சிகரங்களை அடைந்தும் வாழ்க்கையின் அடித்தளமான நிலையை நிலைத்துவைக்க முடியாமல் தவிக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் மௌனமான நிஜங்களை வெளிப்படுத்துகிறது. பட்டம் பெற்றும் வேலையின்மை என்பது அவ்வளவு எளிதல்ல. இது நம்பிக்கையைச் சோதிக்கும் ஒரு பயணம். குடும்பத்தினரின் எதிர்பார்ப்பு, சமுதாயம் பார்க்கும் கோணம், ஊசலாடும் நிலையில் சொந்த வாழ்க்கை இப்படி அனைத்தும் ஒரே நேரத்தில் தாக்கும் ஒரு பயணமாகும். இவ்விதழானது பட்டம் பெற்ற பிறகும் வேலை வாய்ப்பின்றி தவிக்கும் இளைஞர்களின் ஆழ்ந்த வாழ்வுணர்வுகளை வெளிப்படுத்துகிறது. கல்விக்கு அந்நியமில்லாமல், நாள்தோறும் கஷ்டப்பட்டு, பல தியாகங்களைச் செய்து, வெற்றிகரமாக பட்டத்தை பெற்ற மாணவர்கள், வாழ்க்கையின் அடுத்த கட்டமாக வேலை வாய்ப்பினை ஊரெங்கும் தேடி அலைகின்றனர். ஆனால் வேலைவாய்ப்போ அனைவருக்கும் கிடைப்பதில்லை. பட்டதாரிகளே! உங்கள் பட்டம் அர்த்தமற்றதல்ல. உங்கள் கனவுகள் தாமதமாக நிகழலாம் ஆனால் அழிந்துவிடவில்லை. உங்கள் மதிப்பை ஒரு வேலை தீர்மானிக்காது. உங்கள் கனவுகள் இன்னும் உயிருடன் இருக்கின்றன. நம்பிக்கையுடன் பயணத்தை தொடருங்கள்.

விருட்சமானது கோணேசர் மண்ணில் வேரூன்றி, பல கிளைகள் விட்டுத் துளிர்க்கும் இளம் தலைமுறையின் சிந்தனைகளுக்கும், மூத்தோரின் வழிகாட்டும் ஞானத்திற்கும் சமவாய்ப்பளிக்கும் ஒரு சிறப்பான மேடையாக திகழ்கிறது. இளையோர் மற்றும் மூத்தோர் ஆகிய இரு தலைமுறையினரின் பார்வைகளையும் ஒன்றிணைக்கும் இந்த இதழை மேலும் சிறப்பிக்க, உங்கள் கருத்துக்கள், விமர்சனங்கள் மற்றும் உங்கள் தனிப்பட்ட படைப்புகளை எங்களுடன் பகிர்வதை எதிர்பார்க்கிறோம்.

தொடர்புக்கு: 077 624 3212

தலைமை ஆசிரியர்
ர. அதிசயா

# தளை 11 விருட்சம் இதழின் குறுக்கெழுத்துக்கான விடைகள்

| வலமிருந்து இடம் | இடமிருந்து வலம் | கீழிருந்து மேல் | மேலிருந்து கீழ் |
|---|---|---|---|
| 4 - பென்சில் | 1 - விநாயகர் | 5 - நேர் | 1 - வியாபாரி |
| 5 - நேரலை | 6 - கம் | 6 - கலய | 2 - கரம் |
| 8 - வரி | 12 - தார் | 14 - அது | 3 - சிரமம் |
| 9 - கோலம் | 15 - பசுமை | 15 - மேற்பரப் | 4 - பெருங்கோயில் |
| 10 - கரும் | | 17 - காசே | 7 - ஒருமை |
| 14 - அம் | | | 8 - வளி |





# பட்டதாரிகளின் இன்றைய நிலை



பட்டதாரிகளின் இன்றைய நிலை என்ன? என வினவும் போது மேலுள்ள வசனத்தின் இறுதியில் ஒரு வினாக்குறியீடு வைத்துள்ளேன் அல்லவா? அது தான் இன்றைய பட்டதாரிகளின் நிலையாகும். தரம் ஒன்றில் ஏகப்பட்ட கனவுகள் ஆசைகளுடன் பாடசாலையில் காலடி எடுத்து வைத்து இருப்போம். நன்றாக படித்து வளர்ந்து நல்ல வேலையினை பெற்று குடும்பத்தையும் பார்த்து இல்லாதவர், இயலாதவர்களுக்கும் உதவ வேண்டும் என்று சிறு வயது முதல் பல கனவுகளை சுமந்து பாடசாலைக்கு செல்கின்றோம். அதே நோக்குடன் நன்றாக படித்து கல்வியறிவையும் உலக அறிவையும் வளர்த்தோம். இப்படியாக படித்து படித்து அனைத்து பரீட்சைகளிலும் சித்தியடைந்து பல்கலைக்கழக படிப்பிற்கும் தகுதி பெற்று அதனையும் நன்றாக பூர்த்தி செய்து வெளியே வரும் போது நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கும், எமது கனவுகளை நனவாக்கலாம் என்று சிந்தித்து வைத்தோம். பட்டப்படிப்பை நிறைவு செய்த பின்னர்தான் தெரிந்தது, "என்னை நான் காப்பாற்றவே வழி இல்லை; இதில் எங்கிருந்து இல்லாதவருக்கு உதவ முடியும்?". "என் பிள்ளை பட்டப்படிப்பு படிக்குறான். எனது அக்கா பட்டம் பெறுவாள்..." என்பது ஒரு குடும்பத்தின் ஒரு பேராசையாகவே மாறிவிட்டது. ஆனால் அப்பேராசை பேராசையாகவே போய்விடுமோ என்று வேலை தேடும் ஒவ்வொரு பட்டதாரியின் மனநிலையாகவே காணப்படுகிறது. படிக்காதவர்களை பார்த்து சிரித்த காலம் மாறி இப்போது படித்தவர்களை பார்த்து ஏளனமாக சிரிக்கின்ற காலம் வந்து விட்டது. இத்தனை வருடங்கள் படித்தும், இத்தனை வயதாகியும் இன்னும் பெற்றோரிலும், மற்றையவர்களிலும் தங்கி இருப்பதை நினைத்து எவ்வளவு மனவேதனையடைய வேண்டும். இவற்றையெல்லாம் சுமந்து கொண்டு தனது முயற்சியை தவற விடாமல் இன்னும் பல பட்டதாரிகள் வேலை தேடிக்கொண்டு இருக்கின்றனர்.

ஐந்து வருடப் பல்கலைக்கழகக் கல்வி என்றால் சாதாரண குடும்பத்தில் பிறந்த மாணவனுக்கு பெரியதொரு வாய்ப்பு என்றே கருத வேண்டும். அவனின் குடும்பமே சேர்ந்து அவனைப் படிக்க வைத்தால், அவனால் அவனது குடும்பத்தை திரும்பி பார்க்க முடியாத நிலையே இன்று காணப்படுகிறது. இது போதாதென்று பார்ப்பவர்கள் எல்லோரும், "பட்டம் பெற்று இரண்டு மூன்று வருடங்களாகிவிட்டது. இன்னும் வேலைக்கு போகவில்லையா? இல்லை வேலைக்கு செல்லும் நோக்கமே இல்லையா?" என்று கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் எவ்வாறு பதிலளிப்பது என தெரியாமல் ஒரு சலிப்பு நிறைந்த புன்னகையுடன் கடந்து செல்கிறோம்.

நீங்கள் வேலை வாய்ப்பு தந்தால் நாம் ஏன் வேண்டாமென்று சொல்ல போகின்றோம்? அரச பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம்பெற்றவர்களுக்கு அரச துறையிலையே வேலை வாய்ப்பு

இல்லையாம். இதை கேட்கவே எவ்வளவு பரிதாபமாக உள்ளது. தனியார் பட்டம், ஏனைய தனியார் தகைமைகளைக் கொண்ட மாணவர்களுக்கு தான் அனைத்து அரச வேலைவாய்ப்பும் கிடைக்குமென்றால் அரச கல்வி திணைக்களங்கள் ஏன் இருக்கின்றன? என்ற கேள்விகளுக்கெல்லாம் எவ்வாறு பதிலளிப்பது என தெரியாமல் ஒரு சலிப்பு நிறைந்த புன்னகையுடன் கடந்து செல்கிறோம்.

வருடந்தோறும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு ஏன் பல்கலைக்கழக அனுமதியினைக் கொடுக்கிறீர்கள்? அரச கட்டிடங்களை இடித்து அழித்து விடுவதே சிறந்தது என சொல்வேன். அரச வேலைவாய்ப்பு தான் கிடைக்கவில்லை. தனியார் கம்பனிகளிடம் வேலை தேடி சென்றால் அங்கே பட்டதாரி என்றவுடன் வேலை தருவது கடினம் என்று தட்டி கழித்து விடுகின்றனர்.

சமீப காலமாக பல செய்திகள் வெளிவருவதைக் காணலாம். அதாவது வேலையில்லாத விரக்தியில் பட்டதாரி மாணவன் தற்கொலை, தற்கொலை முயற்சி, பட்டதாரிகளின் போராட்டம் என பல இவ்வாறான செய்திகள் வெளிவருவதனையும் நாம் அன்றாடம் காண்கிறோம்.

“பிச்சை புகினும் கற்கை நன்றே” என ஔவையார் கூறியுள்ளார். ஆனால் இன்றைய பட்டதாரிகளின் நிலையினைப் பார்க்கும் போது கற்றால் பிச்சைதான் எடுக்க வேண்டும் என்ற நிலைதான் காணப்படுகின்றது. ஒவ்வொரு தேவைகளையும் நிறைவு செய்வதற்கு பெற்றோரையே நாடவேண்டிய பரிதாப நிலையே இன்றைய பட்டதாரிக்கு காணப்படுகின்றது.

எனவே தகுதியுள்ளவர்கள் சிந்தியுங்கள். இனியும் பட்டதாரிகளுக்கு இத்தகைய அவல நிலை வேண்டுமா?

பதின் மூன்று வருட பள்ளி வாழ்க்கையும் ஐந்து வருட பல்கலைக்கழக வாழ்க்கையும் கற்றுத்தராத பாடத்தை வேலை தேடி அலையும் இரண்டு வருட காலம் கற்றுத்தந்து விடுகின்றது.





சரண்யா சந்திரகுமார்
கலைப்பட்டதாரி
யாழ்பாணப்பல்கலைக்கழகம்





# பட்டதாரியின் குரல்





தாயவள் எம்மைப் பெற்றதும்
தன் பிள்ளை எப்படியாவாள்
என நிதமும் கனவு கண்டு
எமை அழைத்துச் சென்றாள்
கருத்துடனே கல்வி கற்க
கல்விச்சாலைதனை நோக்கி
அன்னையவள் அவா கண்டு
அறிவுதனைப் பெற்றிடவே
இரவு பகல் பாராது நிதம்
இன்பமாய் கல்வி கற்றோம்
புலமைப் பரிசில் பரீட்சையில்
புகழாரம் சூட்டினர் பலர்
சாதாரண தரப் பரீட்சையிலோ
சகல பாடங்களிலும் விசேட சித்தி
உயர் தரத்திலோ ஊர் புகழ
உலகம் போற்ற சித்தி
பல்கலைக்குச் சென்று பட்டம் பெற
பகல் இரவாய் விழித்திருந்து கற்று
பட்டதாரி எனும் நாமம் சூட்டப்பட்டோம்
பட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டு
பற்பல வேலைகளுக்கு
விண்ணப்பித்தோம்
எந்த வேலையும் எமக்கில்லை
என மனம் நொந்து வாடுகிறோம்
கற்பதற்குப் பட்ட கடன் தீர்க்காமல்
பெற்றவர்க்குப் பாரமாய் வாழும்
பட்டதாரி படும்பாடு பற்றி
பாரினிலே அறிவார் யாருளரோ?









பொ. அருந்தவநாயகி
ஓய்வு பெற்ற ஆசிரியை
யாழ்ப்பாணம்



3

# விஞ்ஞானத்துறை பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு



தற்போதைய நவீன உலகில் எந்த ஒரு விடயம் முன்வைக்கப்பட்டாலும் அதற்கான விஞ்ஞான ரீதியான விளக்கம் தான் முதல் கேள்வியாக உள்ளது. முந்தையகாலத்து மூடநம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்ததும் விஞ்ஞானம் தான். எந்தவொரு விடயத்திற்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கம் செலுத்துவதும் விஞ்ஞானம் தான். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கிய புள்ளியாக அமைவதும் விஞ்ஞானம் தான். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை இந்த விடயங்களை கருத்தில் கொண்டு விஞ்ஞானத்துறையை தெரிவு செய்த பெரும்பாலான மாணவர்கள் கையறுநிலைக்குத் தள்ளப்படுவதுதான் எஞ்சிக்காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக சராசரியான மாணவர்கள் தான் பெரும் பாவமாக காணப்படுகின்றனர். ஒரு பழமொழி உள்ளது உங்களுக்கு நினைவு இருக்கிறதா? “வைத்தால் குடுமி அடித்தால் மொட்டை” ஏன் இப்போது சம்பந்தமில்லாமல் இதைச் சொல்கிறேன் என்று உங்களுக்கு தோணலாம் இதோ கூறுகிறேன் அதாவது, விஞ்ஞான துறை மட்டுமல்லாது இன்னும் சில துறைகளிலும் (வணிகம், கலை, மின் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம்) முன்னுரிமையில் உள்ள பட்டங்களைப் பெற்றால் தான் வேலை, இல்லையென்றால் பட்டம் மட்டும்தான் எஞ்சியிருக்கும் வேலைவாய்ப்பு என்பது அறவே இருக்காது. பல துறைகளிலும் வேலைவாய்ப்பு இல்லாதது பெரும் பிரச்சனையாக காணப்பட்டாலும் நான் இப்போது விஞ்ஞானத்துறையில் வேலைவாய்ப்பு இல்லாத பிரச்சனையை மையமாகக் கொண்டே ஆய்வுக்கட்டுரை ஒன்றை முன்வைக்கப்போகிறேன். வாருங்கள் பார்க்கலாம்.

நான் முன்னர் கூறியது போல் விஞ்ஞானம் ஒரு பெரும் முக்கிய புள்ளியாக இருப்பினும் இலங்கையில் விஞ்ஞான துறையை தெரிவு செய்த சராசரி மாணவர்களுக்கு ஏன் வேலைவாய்ப்பு கிடைப்பதில்லை? இதற்குப்பல காரணங்கள் உண்டு நாம் ஒவ்வொன்றாக ஆராயலாம் முதலாவதாக வேலைவாய்ப்புச் சந்தையின் குறைபாடு அதாவது நாட்டில் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி துறைகளின் வளர்ச்சி மெதுவாக நடைபெறுவதால் புதிதாக பட்டம் பெறும் பட்டதாரிமாணவர்கள் தங்களுக்கேற்ற வேலைகளை அடைய முடியாமல் திணறுகிறார்கள்.

அடுத்ததாக தொழில் துறையில் தேவைப்படும் கால்நடை அறிவியல், நனோதொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம், தரவு அறிவியல் போன்ற புதிய துறைகளில் மாணவர்களுக்குப் போதுமான பயிற்சியின்மையும் இதற்கான காரணமாக காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி பல நிறுவனங்கள் தொடர்பாடல்திறன், தலைமைத்துவம், பிரச்சனைகளைத் தீர்க்கும் ஆற்றல் போன்ற மென்திறமைகள் தேவைப்படும்

வேலைகளை மட்டுமே வழங்குகின்றன. இதனால் மென்திறமைகள் இல்லாத மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். அடுத்ததாக ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு தேவையான நிதி இலங்கையில் இல்லாத காரணத்தால் பல விஞ்ஞான துறைகளில் ஆராய்ச்சி தொடர்பான துறையிலும் கூட வேலை வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. அடுத்த காரணமாக காணப்படுவது அரசாங்க வேலைகளுக்கு காணப்படும் போட்டித்தன்மை. அதாவது, அரசாங்கத்தால் வழங்கப்படும் வேலைகளுக்கு மிகவும் குறைவான இடங்கள் மட்டுமே உள்ளது. ஆனால் பட்டம் பெற்ற பட்டதாரி மாணவர்களோ அதிகமாகக் காணப்படுவதால் வேலைவாய்ப்புகளை பெறுவதற்கு கடுமையான போட்டி நிலவுகின்றது. தனியார் துறையின் பங்களிப்பும் குறைவாக காணப்படுவது இதற்கான முக்கிய காரணமாக காணப்படுகின்றது. ஏனெனில், தற்போதைய காலத்தில் அரசாங்க வேலைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் அரசாங்கத்துறையில் விருப்பமில்லாது தனியார் துறையை நாடும் மாணவர்கள் தான் அதிகம் அதற்கும் முற்றுப்புள்ளி இடும்முகமாக தனியார் துறையின் பங்களிப்பும் குறைவாக காணப்படுகின்றது.

பொதுவாகக் கூறுவார்கள் பிரச்சனை என்று ஒன்று இருந்தால் அதற்கான தீர்வு என்று ஒன்று நிச்சயம் காணப்படும். அந்தவகையில், வேலைவாய்ப்பு கிடைக்காமைக்கு இவை அனைத்தும் பிரச்சனைகளாக இருப்பினும் இவற்றிற்கு தீர்வுகளாக ஒரு சில மட்டுமே காணப்படுகின்றன. தற்போது அவற்றை நோக்குவோம். அரசாங்கம் நாட்டின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதேபோல், தனியார் துறையின் பங்களிப்பை அதிகரிக்க அரசு, தனியார் நிறுவனங்களுக்கு உதவ வேண்டும். இதைத் தவிர்த்து மாணவர்கள் தங்களது பயிற்சி மற்றும் மென்திறமைகள் ஆகியவற்றை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். அதுமட்டுமன்றி மொத்தமாக விஞ்ஞானப்பட்டதாரிகள் தங்களின் திறமைகளை மேம்படுத்தி புதிய தொழில்நுட்பத் துறைகளில் கவனம் செலுத்தினால் வேலை வாய்ப்புகளை பெற முடியும். இருப்பினும் அரசாங்கமும் தனியார் துறையும் இணைந்து முன்னேறினால் மட்டுமே இந்த பிரச்சனைகளுக்கு முழுமையான தீர்வுகளை காண முடியும். அவ்வாறு இல்லாவிடத்து இலங்கையில் பட்டம் பெற்ற பட்டதாரி மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தான் தமது வாழ்வாதாரங்களை மேற்கொள்ள நேரிடுகிறது. இதேபோல் வேலைவாய்ப்பற்ற பட்டதாரி மாணவர்கள் அனைவரும் வெளிநாடுகளுக்கு புறப்பட்டால் இலங்கையின் கதி என்னவாவது? பார்க்கலாம். அரசாங்கத்தின் முடிவு என்னவென்று தற்போது விஞ்ஞானத்துறையில் உயர்தர பரீட்சையை எழுதிவிட்டு உங்களுடன் சேர்ந்து நானும் காத்திருக்கிறேன் நாட்டின் வளர்ச்சிக்காக.....





ஜெ. இந்துஜா
திருகோணமலை




# கனவுகள் மறைவதில்லை...



பல்கலைக்கழகத்தின் பொன் ஏடுகள் சுமந்து,
பகற் கனவுகளுடன் வீதியில் இறங்கினேன்.
பட்டம் ஒரு பகடையாய் உருண்டு,
பகைவனாய் மாறியது என் வாழ்வினிலே.

கல்வி முடிந்தது, கனவுகள் மலர்ந்தன,
வேலை தேடி அலைந்தேன், வீதி எங்கும்.
விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டன,
காத்திருந்த கணங்கள்,
விடை இல்லை, வெறும் ஏமாற்றம்.

வேலை தேடி அலைந்தேன், நொந்து போனேன்,
வாழ்க்கை இங்கே வெறும் சுமையானது.
திறமை இருந்தும், வாய்ப்புகள் இல்லை,
தவிக்கும் நெஞ்சம், கண்ணீர் மல்கும்.

நான் எதிர்பார்த்தது வேறு, நடந்தது வேறு,
சேவைகளுக்காக கடந்து போகும் என் காலங்கள்.
சமூகத்தினரின் கண்கள்
அடையாளம் காட்டும் என்ற நம்பிக்கை,
இன்று ஒரு பட்டதாரி என்ற என் கனவை உடைத்தது.

அரச வேலை கனவாகிப் போனது,
தனியார் வேலை சுமையாகிப் போனது.
உயிரின் பல வழிகளும்,
முயற்சியின் பக்கங்களும்,
இன்று எனக்கு காத்திருக்கும் வேலையின் சுடுகாட்டில்.

சான்றிதழ் பார்த்து,
திறமை மறந்து,
சந்தர்ப்பம் தேடி அலைகின்றோம்.
அரசியல்வாதிகள் வாக்குறுதி தந்து,
அதிகாரத்தில் அமர்ந்தபின்,
செயல் எதுவும் இல்லை, வெறும் ஏமாற்றம் மட்டும்.
இளைஞர் சக்தி வீணாகப் போகிறது,
இலங்கை எதிர்காலம் இருளாகிறது





நம்பிக்கை இழக்காமல் போராடி நிற்போம்,
நாளைய சமூகம் நம் கையில் உண்டு.
மாற்றம் ஒன்று தேவை விரைவாக இங்கே,
பட்டதாரிகளின் வாழ்க்கை ஒளியாக மாறட்டும்.

என்னுடைய உழைப்பின் வெறியையும்,
ஆரோக்கியமான கனவுகளையும் துரத்தி,
ஒரு கொழும்பு தெருவில் நான் நடந்து கொண்டு,
ஒரு வேலையின் வேண்டுகோளை,
நான் சிரித்தபடி எதிர்பார்க்கின்றேன்.

அறிவின் அருவிகளைக் கண்டேன்,
காலம் போய்விட்டாலும்,
இனியும் எனக்கு சில பார்வைகள் கிடைக்கும்.
வெற்றி மிளிரும் வெற்றிகளும்,
நான் கண்ணோடு காண்கின்றேன்,
அந்த நாளில் நான் சிரிக்க வேண்டும்.



என்னுடைய கவிதைகளும்
என்றென்றும் பாட வேண்டும்,
நான் ஒரு பட்டதாரி,
என் கனவுகள் இன்னும் சாகவில்லை.





**A.M.F. முர்ஷிதா**
**திருகோணமலை**








5

# பட்டம் பெற்ற பின்னர்....



பாடசாலைக் கல்விக்கு அப்பால் பல்கலைக்கழக கல்வி என்பதே நாட்டில் வழக்கமாக இருந்து வருகின்றது. நம் அனைவருக்கும் அரசாங்க வேலையென்பது ஒரு கனவாக உள்ளது. அந்த கனவானது எளிதில் கிடைத்துவிடுவதில்லை. கடின உழைப்பும் முயற்சியும் இருந்தால் மாத்திரமே நமது இலக்கை அடைய முடியும். அந்தவகையில் இன்றைய காலகட்டத்தில் பட்டதாரி மாணவர்களின் எண்ணிக்கையானது அதிகரித்த வண்ணமே உள்ளது. பட்டப்படிப்பை நிறைவு செய்த பின்பு அவர்களுக்கான வேலை வாய்ப்பின்மையால் பட்டதாரி மாணவர்கள் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். அநேகமானோர் அரசு வேலைவாய்ப்பை எதிர்பார்த்துக்கொண்டு காலத்தை நகர்த்திக்கொண்டிருப்பதனை காணலாம். பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு நிலைமை என்பது ஒரு முக்கிய சவாலாகவும் காணப்படுகின்றது. பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பில்லாத பிரச்சனை நீண்டகாலமாக பேசப்படுகின்ற ஓர் விடயமாக உள்ளது என்றாலுங்கூட எமது நாட்டில் பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டப்படிப்பை பூர்த்தி செய்து வெளியேறும் பட்டதாரிகள் பெரும்பாலானோர்க்கு வேலைவாய்ப்புக்களை வழங்கிய துறையாக அரச துறை காணப்பட்டபோதிலும் நாட்டில் ஏற்பட்ட கொவிட் பெருந்தொற்றின் பாதிப்பினாலும் அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் நிதி நெருக்கடி நிலை போன்றவற்றினால் நாட்டின் அனைத்து நிலைகளும் மாற்றத்தை எதிர்நோக்கியது. இதன் காரணமாக இன்றுவரை அரசசேவைக்கென பட்டதாரிகள் உள்வாங்கப்படாமை பட்டதாரிகளின் மத்தியில் வேலைவாய்ப்பின்மை அதிகமாக காணப்பட காரணமாக அமைந்தது. எனினும் பட்டப்படிப்பை நிறைவுசெய்த பின்னர் வேலையின்மையால் அவர்களது எதிர்கால திட்டமிடல், செயற்பாடுகள் என எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாமை பட்டதாரி மாணவர்களின் வாழ்வியலில் பெரும் தாக்கமொன்றினை ஏற்படுத்தியுள்ளமையினைக் காணலாம்.

இவர்கள் பட்டப்பூர்த்தியின் பின் பலதரப்பட்ட இடங்களில் பல்வேறு வகையான தொழில்களில் ஈடுபட்டுள்ளமையினை காணலாம். படிப்பிற்கும் செய்கின்ற தொழிலிற்கும் சம்மந்தம் இல்லாத வகையில் அவர்களின் வாழ்க்கை முறை உள்ளது. பலர் கூலி வேலையும், சாப்பாட்டுக் கடைகளிலும், காவலாளிகளாகவும் , பல கடைகளிலும் அதாவது ( செருப்பு, உடுப்பு, மலிகை பொருட்கள், பான்சி கடைகள்) உள்ளிட்ட வியாபார கடைகளில் கூலிக்கு வேலை செய்பவர்களாகவும் காணப்படுகின்றனர். செய்யும் தொழிலை ஏளனமாக சித்தரிக்கவில்லை ஆனாலும் படித்து பட்டத்தை பெற்று கூலிக்கு வேலை செய்வது மிகவும்

மனவேதனை தரக்கூடிய ஓர் விடயமாகும். இவை உள்ளிட்ட பல தொழில்களில் பட்டதாரி மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். இவையனைத்தும் விருப்பத்தோடும் விருப்பமில்லாமலும் குடும்ப சூழ்நிலைகளின் நிமித்தம் இவர்களின் நாளாந்த செயற்பாடுகள் காணப்படுகின்றது. அத்தோடு பலர் தங்களுடைய திருமண வாழ்க்கையை பின்தள்ளி வைப்பதினை காணலாம்.

இத்தகைய செயற்பாடுகள் ஒருபுறம் இருக்க பல பட்டதாரிகள் தங்களது திறமைகளிற்கு ஏற்ற வேலைகளை கண்டுபிடிக்க முடியாது உள்ளனர். மற்றும் இலங்கையின் பொருளாதார சிக்கல்கள் பட்டதாரி மாணவர்களின் வாழ்வாதாரத்தை மேன்மேலும் கடினமாக்குகின்றன. இன்றைய காலகட்டத்தில் பணவீக்கம், வேலையின்மை, மற்றும் வாழ்க்கை செலவுகள் உயர்ந்துள்ள்மையினைக் காணலாம். இதனால் வேலைவாய்ப்புக்களிற்கு அதிகபடியான போட்டி நிலவுகின்றது. பல பட்டதாரிகள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தவும் சிறந்த வேலைகளை பெறவும் போராடுகின்றனர். சில பட்டதாரிகள் தங்களது துறையில் தேவையான திறமைகளை கொண்டிருக்கவில்லை. இத்தகையதொரு நிலைமை வேலைவாய்ப்புகளைப் பெறுவதிலிருந்து தடுத்து விடுகின்றது. முன்னைய காலங்களில் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறியதும் ஏதாவதொரு அரசாங்கத் தொழில் அவர்களுக்கென உடன் தயாராக இருந்தது. அன்றைய காலகட்டத்தில் பட்டதாரிகளுக்கான உடனடி தொழில் வாய்ப்பாக ஆசிரியத் தொழிலே காணப்பட்டது. ஆனால் இன்றைய நிலைமை அவ்வாறில்லை. ஒவ்வொரு வீட்டிலும் பட்டதாரிகள் உள்ளனர். சில குடும்பங்களில் பட்டம் பெற்ற நிலையில் இரண்டு, மூன்று பேர் உள்ளனர். பட்டம் பெற்றும் பல வருடங்கள் கடந்து விட்ட போதிலும் இன்னுமே தொழில் வாய்ப்பு கிடைக்காதோரே அவர்களில் அதிகமாகும். இவ்வாறிருக்க பட்டதாரிகள் கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றமையினைக் காணலாம். அவர்களுடைய கேள்வி, அரசாங்கம் எவ்வாறு தொழில் வாய்ப்பை வழங்கப் போகிறது? என்பதாகும். இதற்கான சரியான தொரு தீர்வுக்காக பட்டதாரி மாணவர்கள் காத்திருப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறாக வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கைகளும், போராட்டங்களும் நாட்டில் தொடர்ச்சியாக அதாவது ஆண்டுதோறும் நடைபெறுகின்றன. குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறிய பட்டதாரிகள் வீதிக்கு இறங்கி வேலை வாய்ப்புகளுக்காக போராட வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

அரச வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களை தொழிற் சந்தைக்கு ஏற்றதாக தயார் படுத்துதல் பற்றிய திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இவ்வாறில்லாது போனால் காலகாலமாக வேலையற்ற பட்டதாரிகள் என்றொரு சமூகம் நாட்டில் இருந்து கொண்டேயிருக்கும்.

வெறுமனவே பட்டதாரி மாணவர்கள் அரச வேலையின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறிவிடவும் முடியாது. ஏனெனில் பாதிப்பை எதிர்கொண்டிருந்தாலும் பலரது



நிரோஜினி கந்தசாமி
கலைப்பட்டதாரி (வரலாறு)

பயணமானது வெற்றிகரமாக அமைந்துள்ளமையினைக் காணலாம். உதாரணமாக கூறின் சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்கி முன்னேறியுள்ளனர். தனியார் துறைகளில் பணிபுரிகின்றனர். மேலும் அடுத்த கட்ட பட்டப்படிப்பை நோக்கிச் செல்கின்றனர். பட்டதாரிகள் தங்களது திறமைகளை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முடியும். அதாவது திறமைகளை மேம்படுத்திக்கொள்ள நிறைய வாய்ப்புகள் உள்ளன. பயிற்சி படிப்புகள், மற்றும் மேற்படிப்புகள் மூலம் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ளலாம். பட்டதாரிகள் தங்களது திறமைகளை வைத்து சுயதொழில்களையும் தொடங்கலாம். அத்தோடு தொடர்பாடல் திறன்களையும் வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

“தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்” என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க கடவுளால் கூட முடியாது என்றாலும், வருந்தி உழைக்கின்ற முயற்சி இருக்குமானால் அவ் முயற்சிக்கேற்ற பலன் கிடைத்தே தீரும் என்பதாகும். அந்த வகையிலே, “முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்” என்பதற்கிணங்க, இன்று பட்டதாரி மாணவர்கள் பல சவால்களையும் அதே சமயம் பல வாய்ப்புகளையும் எதிர்கொள்கிறார்கள். பட்டதாரிகள் தங்களது திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவும், புதிய வாய்ப்புகளைத் தேடவும் தயாராக இருக்க வேண்டும். மேலும் அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களும் பட்டதாரி மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்கவும் உதவ முன்வரவேண்டும்.

## தெரிந்து கொள்வோம் !

1. General Degrees:

BA (Bachelor of Arts) – கலைத்துறை
BSc (Bachelor of Science) – அறிவியல் துறை (Biology, Physics, Chemistry, Mathematics)
BCom (Bachelor of Commerce) – வணிகவியல்

2. Honours Degrees:

BA (Hons) – கலைத்துறையில் சிறப்பு
BSc (Hons) – அறிவியலில் சிறப்பு (உதாரணம்: BSc (Hons) in Agriculture)
BCom (Hons) – வணிகவியல் சிறப்பு

3. Professional Degrees:

MBBS – மருத்துவம்
BDS – பல் மருத்துவம்
BEng / BSc Eng (Hons) – பொறியியல் (Engineering)
LLB – சட்டம்
BBA – மேலாண்மை நிர்வாகம்
BEd – கல்வி (Education)
BVSc – கால்நடை மருத்துவம் (Veterinary Science)
BPharm – மருந்தியல் (Pharmacy)
BN / BSc Nursing – தாதியர்

4. Special Degrees (some fields):

BFA (Bachelor of Fine Arts) – நுட்ப கலை
BArch (Bachelor of Architecture) – கட்டிடக்கலை
BIT (Bachelor of Information Technology) – தகவல் தொழில்நுட்பம்




# பட்டதாரி எனும் முகமூடிக்குள்!



பதின்மூன்று ஆண்டுகள் பாடசாலையின்
பலதவணைப் பரீட்சைகளில்
கட்டிளமையும் ஒன்றாகிற்று
கழுத்திறுக்கும் கடன்வேறு
கட்டிவைத்த கோட்டையாகிற்று...




எல்லாவற்றையும்
காப்பாற்றிச் செல்லும் கல்வி
என்ற நம்பிக்கையின் வேர்கள்
கனவுகளை சுமந்து
பட்டங்களைப் பூக்கச் செய்கிறது
ஏடுகளைத் தவிர எதிர்காலத்தை
மணம் வீசச் செய்வதாக இல்லை..

எனக்காக வியர்வையில் உருகிய தந்தை
விழுந்த மண்ணோடு, சென்றார்
எனை ஈன்றவள் என் பெயரில்
பட்டங்கள் சேமித்து
மீள் எடுத்தலுக்காய் காத்திருக்கிறாள்
வீட்டுக்கூரை கிழிந்து ஒழுகும் மழைநீர் மட்டும்
என்னுள் புதைந்திருக்கும்
மொழிகளைத் தேடுகின்றன...




தேசத்தின் கணக்கெடுப்பில்
காணாமல் போன பட்டங்களைத் தேடி
வீதிகளெங்கும் ஆர்ப்பாட்டங்கள்!
தொலைத்தது யார்? என்று கேட்கிறார்கள்
கவர்மண்டு காரர்கள்
முயற்சியிடம் கேட்டாலும்
முதலீடு கேட்கிறதே!....

நில்லாத காலங்களுக்குள்
நிலைகொள்ளும் தேடலுக்காய்
விடைதேடும் சுற்றத்திற்கு - இன்று
விடியாமல் அணிந்திருக்கிறேன்
பல்கலை அரசின்
“பட்டதாரி முகமூடிகள்....





கந்தசாமி பிறேமலதா
தமிழ் கற்கைகள் துறை.
கலைக் கலாச்சார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.




# வாராதோ ஒரு பொழுது






காலையிலே கண் விழித்து கருத்துடனே தான் படித்து
வேலையெல்லாம் ஒத்திவைத்து வகுப்பினிலே வதைபட்டு
அங்குமிங்கும் ஓடி ஆகாரமும் தவிர்த்து
பள்ளியிலே பாடுபட்டால் பல்கலைக்கழகம் சித்தமென

புள்ளியெல்லாம் சேர்த்து புணர்ந்ததோர் பெறுபேற்றை எண்ணிட்டால்
அதிவிசேட சித்தியே அரியதோர் அக்கரை தேடித்தருமாம்
சிறுகச்சிறுக மேலுயர்ந்து சின்னமாயோர் மதிப்பெண் பெறினும்
நியமப்புள்ளியாம் ஒன்றுண்டே நிச்சயம் தான் செய்வதற்கு!



அல்லல்பட்டும் அடிபட்டும் அமைத்தவோர் பல்கலைக்கழகம்
சொல்லும் நம் வாழ்வை இனி செம்மையாய் குவலயத்தில்-என
செல்லும் வழியெல்லாம் சிறப்புடனேதான் கற்று
பல்லினிய நினைவுகளை பக்குவமாய் சேமித்தோம்.

மேற்படிப்பு வாழ்வியலே இம்மேதினியில் அற்புதமாம்
கல்வியோடு அனுபவமும் கருத்துடனே யாம் சேர்த்தோம்
தடைகளெல்லாம் தாண்ட தற்துணிவு கைக்கொண்டு
விடைகளோராயிரம் எழுதி விருப்புடனே தேர்ச்சி பெற்றோம்.

பட்டம் வந்த பின்தான் புரிந்ததுவோ வாழ்க்கை எனும் பாலைவனம்
இதுவரை யாம் கடந்ததுவே பல்கலைக்கழகமாம் சோலைமரம்
தொழிலுக்காய் காத்திருந்து தொலைந்ததென்னவோ ஆண்டுகளே!
சுற்றத்தார் அறிவுரைக்கோ பஞ்சமேதுமில்லை சற்றே பாடநெறி தேர்தல் தவறென்றே



பட்டம் பெற்றதப்பால் பாடநெறி பிழையெனல் தகுமோ?
அறியாக்குழவி அருந்தாவடியும் அன்னையின் முலைப்பாலென யாம்
அங்குமிங்கும் சிதறுண்டு அநாதையாய் அலைகிறோமே
மனைக்கோர் சுமையாய் மட்டறியாமல் மக்குகிறோமே

குன்றத்திற் குடவிளக்காய் குணவந்தரராய் யாம் ஒளிர,
மன்றத்தில் மாதர்முன் மதிப்பாய் தான் மிளிர
நன்றென நயமுடனே நத்தம் விலக்கிட,
வென்றிக்காய் வாடும் எமக்கு, வாராதோ ஒரு பொழுது....





சி.பர்வத்சினி
மட்டக்களப்பு



8

# உங்கள் நேரம் வரும்




இன்றைய இளைஞர்களின் பெரும்பாலான சவால்களில் ஒன்று வேலையின்மை. கல்வியை முடித்த பிறகு, பலர் கனவுகளுடன் எதிர்பார்க்கும் அந்த முதல் வேலை கிடைக்காத சமயம், வாழ்க்கையே வீணாகிவிட்டதோ எனும் உணர்வு உருவாகிறது. இது ஒருவரது தன்னம்பிக்கையை சிதைக்கக்கூடிய மிகுந்த அழுத்தமான நிலையாகும். ஆனால் உண்மையில், இது ஒரு முடிவல்ல மாறாக ஒரு புதிய திசையைக் காட்டும் பயணம் ஆகும். "தோல்வி என்பது ஒரு முடிவல்ல, அது வெற்றிக்கான தொடக்கம்". வேலையின்மை என்பது தோல்வி அல்ல, மாறாக நம்மை மேலும் பயிற்சி செய்து, நமது திறன்களை மேம்படுத்தும் ஒரு நல்ல வாய்ப்பு. இந்த இடைநிலை காலத்தில் நாம் மொழி, தொழில்நுட்பம் போன்ற பல புதிய திறன்களை கற்றுக்கொள்ளலாம். இவை நமக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குகின்றன. பலர் வேலையின்மையை துன்பமாக பார்க்கிறார்கள். ஆனால் அதை ஒரு விழிப்பு அழைப்பாக மாற்றியவர்கள் தான் வாழ்க்கையில் உயர்ந்திருக்கிறார்கள்.

பட்டம் என்பது வாழ்க்கையின் முழு பயணமும் அல்ல. அது வெறும் ஒரு படிநிலையே. வேலை கிடைக்காத காலம் என்பது நிராகரிக்க வேண்டிய காலம் அல்ல. அது சுயநலன்களை புரிந்துகொள்ள, திறமைகளை வளர்த்துக்கொள்ள, புதிய பயணங்களைத் தேட வழிவகுக்கும் ஒரு வாய்ப்பு. உலகம் அதிவேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. அந்த முன்னேற்றத்தின் போக்கில், நாமும் கற்றுக்கொண்டே செல்ல வேண்டும். இன்றைய உலகம் தங்கள் திறமையை நிரூபிக்க விரும்பும் நபர்களை தேடிக்கொண்டு வருகிறது. அதற்காகவே, இந்த நேரத்தை பயனுள்ளதாக மாற்றிக் கொள்ள வேண்டும். சமூக ஊடகங்கள், ஆன்லைன் தளங்கள் போன்றவை உங்கள் திறமையை வெளிக்கொணர உதவும் மேடைகளாக இருக்கின்றன. தாமதமான வெற்றி கூட, நிச்சயமான வெற்றிதான். இன்று நீங்கள் எதிர்கொள்கிற சவால்கள், நாளைய வெற்றிக்கு அடித்தளமாக இருக்கும். ஒவ்வொரு தோல்வியிலும் ஒரு பாடம் இருக்கிறது. வாழ்வின் ஒவ்வொரு படியிலும் ஒரு சவால் இருக்கிறது. உங்கள் பயணம் இப்போது சவால்களால் நிரம்பியதாக இருக்கலாம். ஆனால் உங்கள் முடிவை உங்கள் தொடக்கத்தால் தீர்மானிக்க வேண்டாம். ஒவ்வொரு விடாமுயற்சிக்கும் ஒரு வெற்றிகிட்டும் நாள் இருக்கிறது. உங்கள் திறமை, உழைப்பு மற்றும் நம்பிக்கையை ஒருபோதும் கைவிடாதீர்கள். நீங்கள் இப்போது வேலை இல்லாமல் இருக்கலாம் ஆனால், உங்கள் கனவுகள், உங்கள் அர்ப்பணிப்பு, உங்கள் விடாமுயற்சி உங்களை நாளை ஒரு முன்னணி நபராக மாற்றும். எனவே, மனமுடையாதீர்கள். உங்கள் நேரம் வரும். அதற்கு நீங்கள் தயாராக இருங்கள்!




ர. அதிசயா
திருகோணமலை



9

# தனிமையில் வெளியூர் பல்கலைக்கழக இரவு



எண்ணற்ற சிந்தனைகளோ மனதினில்
நீங்காமல் தவிக்கும் என்னிடத்தினில்
யாதும் செய்ய முடியா நிலையினில்
சிக்கிக் கிடக்கின்றேன் ஓரிடத்தினில்



வழிகாட்டியானதோ வானத்து நட்சத்திரம்
இருள் நீங்கி பிறக்குமோ புதியதொரு வெளிச்சம்
தினம் தினம் நீண்டு செல்லும் அலைச்சல்
யாரிடம் சொல்வேன் என் மன உளைச்சல்



மீண்டும் கிடைக்காதா மழலைப் பருவம்
உணவு நினைவூட்டும் தாயின் அருமை
தேவைகள் செய்து தர அருகில் இல்லையே தந்தை
அனைத்தையும் தனியே செய்வேன் என எண்ணி
வந்து தவறு இழைத்து விட்டேன்



இனி தொடர்ந்திடுமே இப்பயணம் இறுதி மூச்சு வரை...

தனிமையில் அமைதியை தேடும் ஒருவன்.....








சு. பிரணவன்
யாழ்ப்பாணம்

# 10 தளத்தின் பயணங்கள்



02.03.2025 - Game show, Office cleaning, Gardening
06.03.2025 - Setup LinkedIn profile Bootcamp
06.03.2025 - Self confidence Bootcamp
07.03.2025 - Final presentation for Vidial 3.0
09.03.2025 - Anger management Bootcamp
09.03.2025 - Talent show
10.03.2025 - Office management and financial management
12.03.2025 - Digital marketing Bootcamp
13.03.2025 - Artificial Intelligence Bootcamp
14.03.2025 - Project in Chinabay
15.03.2025 - Communication skills Bootcamp
16.03.2025 - Cyber security Bootcamp for Vidiyal 4.0
17.03.2025 - Thalir 4. 0 Begins
17.03.2025 - Digital Designing Bootcamp
18.03.2025 - Social Media & Personal Building Bootcamp
19.03.2025 - Sustainable living Bootcamp
21.03.2025 - Future ICT Bootcamp
23.03.2025 - Virutcham 11 th edition release
24.03.2025 - Self protection and mental health Bootcamp
25.03.2025 - Artificial Intelligence Bootcamp
25.03.2025 - Career guidance and future opportunities
27.03.2025 - Volunteerism Bootcamp
28.03.2025 - Ideology Bootcamp
28.03.2025 - Career guidance and future opportunities (zoom)
30.03.2025 - A/L Choices & Future Pathways Bootcamp

03.04.2025 - Digiton 1.0 started
04.04.2025 - Content Creation and Marketing Bootcamp
05.04.2025 - Part time earnings Bootcamp (zoom)
05.04.2025 - Google apps Bootcamp
08.04.2025 - Artificial Intelligence
11.04.2025 - Final presentation for Vidiyal 4.0
12.04.2025 - Jobs in Software Industry Bootcamp
12.04.2025 - Artificial Intelligence Bootcamp
12.04.2025 - Coding Basics Bootcamp (zoom)
15.04.2025 - Canva basic designing Bootcamp
15.04.2025 - Goal setting Bootcamp
16.04.2025 - LinkedIn Introduction Bootcamp
16.04.2025 - Camera handling Bootcamp
17.04.2025 - Canva advance designing Bootcamp















# தளத்தின்























# தடங்கள்













# 11 இளம் வரைகலை


















Pooja Nagendiram.

பட்டதாரிகளின் இன்றைய நிலை

இந்த படத்தின் மேல் கல்வி பெற்றாலும் வேலை இல்லாமல் தவிக்கும் இளைஞர்களின் நிலையை காட்டுகின்றது. இன்றைய சமூகத்தில் பட்டப்படிப்பே வாழ்க்கையை பாதுகாக்கும் உறுதிப்பாடு இல்லை என்பதை உணர்த்தும் ஒரு தீவிரமான செய்தி இப்படத்தின் மேல் உணர்த்தப்படுகின்றது.



12

# வெற்றிடமான கனவுகள்






கனவுகளோடு நுழைந்தோம் பல்கலைக்கு!
பட்டங்கள் சுமந்தோம்
அடுத்த அத்தியாயத்திற்காக!
படிப்பின் பயணம் முடிந்தது!
ஆனால் வாழ்வின் பயணம்
தொடர்கிறது!



கற்றுக் கொண்டு உயர்ந்தோம்!,
கனவுகளோடு வாழ்ந்தோம்!
ஆனால், இப்போது வருவாய்த்தொகுதி
எம்மை ஒதுக்கிவைத்துவிட்டது!
நாம் கையில் பட்டச் சான்றிதழ்
பெற்றுக்கொண்டோம் – ஆனால்
வாழ்க்கை அதை வாசிக்க மறுத்துவிட்டது!
இங்கு கற்றது ஆயிரம்!
ஆனால் வாழ்வின் வழியில்
ஒளியில்லா பிரயாணம்!



வெற்றிடமான அலுவலகங்கள் இருந்தும்
அது "அனுபவம் இல்லை என்று" சொல்லி
எமக்கான வாய்ப்புக்களை தர மறுத்து
வாயிலை அடைத்தன



விரல்கள் எழுதக் கற்றன, ஆனால்
அதற்கு இப்போது வேலை இல்லை..
நாம் கனவுகளோடு வந்தோம், ஆனால்
இங்கு கனவுகளே கண்ணீரில்
கரைகின்றன



கண்களில் கனவுகள்,
நெஞ்சில் நம்பிக்கை...
பட்டமே பெற்றோம்... ஆனால் படிக்க
வேண்டிய பாடமே நிஜ வாழ்க்கைதான்
என்று புரிந்தது!





மகாலிங்கம் டிலானி
கலைப்பட்டதாரி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



# பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு சவால்கள்




இன்றைய உலகில், உயர்கல்வி பெறுவது மட்டுமே வேலைவாய்ப்பை உறுதி செய்வதில்லை. பல பட்டதாரிகள் தங்கள் கல்வி தகுதிக்கு ஏற்ற வேலைகளை பெறுவதில் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். நம் நாட்டில் குறிப்பாக 25 தொடக்கம் 29 வயதுடைய இளைஞர்கள் பலர் வேலையில்லா பட்டதாரிகளாக காணப்படுகின்றனர். இந்த நிலையை அவதானித்து, அதற்கேற்ற தீர்வுகளை கண்டறிவது கட்டாயமானது. இன்றைய வேலை சந்தையில் வேலையில்லா பட்டதாரிகள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். வேலை சந்தைக்கேற்ற தொழில் திறன் விருத்தி இன்மையால் இலங்கையில் உயர் வேலையின்மை விகிதம் காணப்படுகிறது. இலங்கை பொருளாதாரம் பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. அரசியலின் நிலையற்ற தன்மை முதல் தொற்று நோய்களின் நீடித்த விளைவுகள் வரையான பல்வேறு காரணிகள் இலங்கையின் பொருளாதாரத்தின் நிலையான தன்மையை நிலைகுலையச் செய்தது மட்டுமன்றி, இது வேலைவாய்ப்பு உருவாக்கத்தை கடுமையாக பாதித்து, பட்டதாரிகள் வேலையொன்றை பெற்றுகொள்வதற்கான நிலையினை ஓர் சவால் மிக்க விடயமாக மாற்றியமைத்தது. தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை கல்வி நிறுவனங்களால். வழங்கப்படும் திறன்களுக்கும், தொழில்துறை மற்றும் சேவை துறையால் தேவைப்படும் திறன்களுக்கும் இடையே பெரும் இடைவெளி உள்ளது. ஒவ்வொரு வருடமும், இலங்கையில் சுமார் 160,000 மாணவர்கள் உயர்கல்விக்கு தகுதிபெறுகின்றனர். ஆனால் 30,000 இளைஞர்கள் மட்டுமே பல்கலைக் கழகத்தில் தமது உயர் கல்வியை தொடர்கின்றனர். வேலைவாய்ப்பை பெறுவதற்கு திறன் மேம்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது. கல்வி அறிவுக்கும் நடைமுறை திறன்களுக்கும் இடையிலான இடைவெளி கவனிக்கப் படவேண்டும். பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் அறிவு அடிப்படையிலான கல்வி நடைமுறை திறன்களை குறைவாகவே மேம்படுத்துகிறது. இந்த இடைவெளியை குறைத்தால் வேலைவாய்ப்பு அதிகரிக்கும். திறன் மேம்பாடு என்பது வேலை படைப்பின் வேலைத்திறன் மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்துவதில் அத்தியாவசிய அம்சமாகும். பட்டதாரிகள் வெற்றி பெற தொழில்நுட்ப திறன்களுடன் மென் திறன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். தொழில்நுட்ப கருவிகள் மற்றும் மென்பொருள்களை கையாளும் திறன்கள், தொடர்பாடல் திறன்கள், குழு வேலை, பிரச்சினைகளை தீர்க்கும் ஆற்றல், நேர மேலாண்மை மற்றும் புத்தாக்க சிந்தனை போன்ற பண்புகள் வேலை வழங்குனர்களால் பட்டதாரிகள் இடமிருந்து எதிர்பார்க்கப்படும் முக்கிய அம்சங்களாக திகழ்கின்றன. அத்துடன் டிஜிட்டல் மயமாக்கம் மற்றும் தொழினுட்ப வளர்சியுடன் அடிப்படை தகவல் தொழில்நுட்ப திறன்கள் அனைத்து துறைகளிலும் அவசியமாகிவிட்டன. பட்டதாரிகள் தங்கள் திறனை மேம்படுத்துவதிலும், சுய திறன்களை கற்பதிலும் தமது நேரத்தையும், ஆர்வத்தையும் முதலீடு செய்தல் வேண்டும். இலங்கையின் திறன் துறை மேம்பாட்டு திட்டம் போன்ற பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு திட்டங்கள்

தொழில்நுட்ப பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதற்கும், தொழிலாளர் சந்தையின் திறன் தேவைகளை பகுப்பாய்வு செய்வதற்கும் உதவுகின்றன. இத்தகைய திட்டங்கள் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பை கணிசமாக அதிகரிக்க உதவுகின்றன. கல்வியிலிருந்து தொழில்முறை வாழ்க்கைக்கு மாறும் போது பட்டதாரிகள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். பல பட்டதாரிகள் தங்கள் கல்வி தகுதிக்கு ஏற்ற உயர் ஊதியம் கொண்ட வேலைகளை எதிர்பார்க்கின்றனர். ஆனால் யதார்த்தத்தில் பெரும்பாலான பட்டதாரிகள் குறைந்த ஊதியம் கொண்ட ஆரம்ப நிலை வேலைகளில் இருந்து தொடங்க வேண்டியுள்ளது. எனவே இவ் ஏமாற்றம் பட்டதாரிகளை விரக்திக்கு உள் வாங்குகின்றது என்பது கசப்பான உண்மையாகும். அதிகளவிலான பட்டதாரிகள் தங்கள் திறமைகளுக்கேற்ற வேலைகளை காணும் வரை தற்காலிக வேலைகளில் ஈடுபடுகின்றனர். இலங்கையில், ஒவ்வொரு பத்து வேலை செய்யும் பட்டதாரிகளில் ஒருவர் குறை வேலைவாய்ப்பில் உள்ளார். பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் துறைகளும் வளர்ந்து வந்து கொண்டு இருக்கின்றது. இலங்கையில் வளர்ந்து வரும் துறைகளாக தகவல் தொழில்நுட்பம், டிஜிட்டல் சந்தைப்படுத்தல், சுகாதாரம், நிதி சேவைகள் மற்றும் சுற்றுலா போன்ற துறைகள் வேகமாக வளர்ந்து வருகின்றன. தகவல் தொழில்நுட்ப துறையில் செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல், இலத்திரனியல் வணிக உத்தி வகுப்பாளர்கள் மற்றும் தரவு விஞ்ஞானிகள் போன்ற நிபுணர்களுக்கு தேவை அதிகரித்து வருகிறது. புதுப்பிக்கத் தக்க எரிசக்தி துறையும் வளர்ந்து வருகிறது. எனவே அத்துறையிலும் தொழில்நுட்ப வல்லுனர்கள் தேவைப்படுகின்றார்கள். பொருளாதார கொள்கைகளை மேம்படுத்தல், திறன் மேம்பாட்டு திட்டங்களுக்கு நிதி உதவிகளை வழங்குதல், தொழில்முனைவோரிற்கு ஆதரவளிக்கும் சூழலை உருவாக்குதல், தொழில்துறைகளுக்கு அவசியமான பண்புகளை அடிப்படையாக கொண்டு பாடசாலை மற்றும் உயர்கல்விக்கு உரிய பாடத்திட்டங்களை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அரசாங்கத்தால் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினை பெற்றுத்தர முடிவதுடன் தொழில் சந்தையில் காணப்படும் வேலை நிரம்பலை பூர்த்தி செய்யவும் முடியும்.

இலங்கையின் வேலை சந்தை மாறிக்கொண்டே இருக்கிறது . எனவே மாற்றங்களுக்கேற்ப தங்கள் திறன்களை வளர்த்து கொள்பவர்களே வேலை உலகில் நிலைத்து நிற்கும் ஆற்றலை பெறுவர். சரியான திறன்கள் தொடர் தேர்ச்சியான கற்றல் மற்றும் மாறும் சூழல் நிலைகளுக்கேற்ப தழுவிக் கொள்ளும் திறன் என்பன இன்றைய வேலை உலகில் உயர் பதவிகளை பெற உதவிபுரியும் என உறுதிபட கூறிக்கொண்டு இவ் ஆய்வு கட்டுரையானது பட்டதாரிகளின் வெற்றிப் பாதைக்கு வழிவகுக்கும் ஓர் உற்ற உறுதுணையாக அமையும் என நம்புகின்றேன்.



சு.ஷியாணி
திருகோணமலை




# சுதேச மருத்துவர்களின் இன்றைய நிலை



சித்த, ஆயுர்வேதம், யுனானி ஆகிய மூன்று சுதேச மருத்துவப்பிரிவுகளும் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நிலையிலும் இன்றைய சுதேச மருத்துவத்தின் எதிர்காலமும், சுதேச மருத்துவர்களின் வாழ்வும் நம் நாட்டில் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. ஐந்து பல்கலைக்கழகங்களில் வருடாந்த மாணவர் உள்வாங்கல் நடைபெற்று வரும் அதேவேளை 5 வருட பட்டப்படிப்பை முடித்து ஒரு வருட உள்ளகப் பயிற்சியினையும் முடித்து மருத்துவர்களாக வெளியாகி நாம் எமக்கான அங்கீகாரம் கிடைக்கபெறாமல் எமது சொந்த நாட்டிலேயே இருப்பை தக்கவைத்து கொள்ள முடியாதவர்களாக உணர்கின்றோம்.

அண்ணளவாக 1700 சுதேச மருத்துவபட்டதாரிகள் இதுவரை நிரந்தர அரச நியமனமற்று நிர்க்கதியாக நிற்கின்றோம். இன்னும் ஒரு வருட காலத்திற்குள் இந்த எண்ணிக்கை 2500 எட்டும் அபாயம் ஏற்பட்டுள்ளது. 2007ம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றி சுதேச மருத்துவர்களாக பட்டம் பெற்றவர்களிருந்து இதுவரை வெளியேறியவர்கள் வரை வேலையற்ற பட்டதாரிகளாகவே உள்ளோம்.

இலங்கையின் 14022 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் ஏராளமான சித்த, ஆயூர்வேத வைத்தியசாலைகள் சேவையில் உள்ளன. இருந்தும், அனேகமான வைத்தியர்கள் பற்றாக்குறையால் மேற்கொண்டு சேவையாற்ற முடியாமலும், எம்மை நாடிவரும் நோயாளிகளுக்கு மனநிறைவான சேவையை வழங்கமுடியாமலும் மூடப்பட வேண்டிய கையறு நிலையிலேயே இருக்கின்றன. 7 கிராம சேவையாளர் பிரிவுக்கு ஒரு வைத்தியர் நியமனம் வழங்கப்பட்டாலே சுதேச மருத்துவரின் இருப்பை தக்கவைத்து கொள்ள முடியும். ஆயிரத்திற்கும் மேற்பட்ட எமது மூலிகைகளின் பயன்பாடுகள் அழிவடையும் அபாயத்தை எட்டியுள்ளன. வருடாந்தம் மில்லியன்கள் தாண்டிய அளவில் இறக்குமதி செய்யப்படும் கண்டங்கத்தரி எனும் தாவரம் எமது கிராமத்தில் தாராளமாக காணப்படுகின்றது. ஆனால் நாம் அவற்றை பயன்படுத்தி மருந்து உற்பத்தி செய்வதை விடுத்து இன்னும் இறக்குமதியை நம்பியே உள்ளோம். மூலிகைகளை கொண்டு மருந்து உற்பத்தி செய்யும் திறமை உள்ள சுதேச மருத்துவர்ககள் இருந்தும் அவர்களுக்கு நியமனம் வழங்கப்படமால் இருப்பதே இதற்கான காரணமாகும். இவ்வாறு இலங்கையில் ஆயிரக்கணக்கான வெளியூர் சுதேச மருந்துகள் மற்றும் அலோபதி மருந்துகள் யாவும் இறக்குமதியை நம்பியே செய்யப்பட்டவாறு உள்ளன. சுதேச மருந்துகளின் உற்பத்தியை கூட்டுவதன் மூலமும் இலங்கை நாட்டின் பொருளாதாரத்தில் கணிசமான வளர்ச்சியை அடைய முடியும் என்பது நிதர்சனமான உண்மையாகும்.



Dr.ஜ.தட்ஷாயினி (BSMS)
முல்லைத்தீவு

SCAN



15

# பல்கலைக்கழக நட்பு





ஒரு மரம் இன்று
விடைபெற்றது
மழலை பேசி மகிழ்ந்த
உள்ளங்கள் - இன்று
நிழலாகிப் போனது

பட்டப்படிப்பு முடிந்ததும்
பல்கலைக்கழகம் விட்டு பிரிந்தோம்
வாழ்க்கையிலும் தூரமாய்
போனோம் - உன்
நினைவுகளை மட்டும்
நிறையவே தந்து விட்டு சென்றாய் நண்பனே



வித்தியாசமாக இருந்தது
உலக நட்பு மட்டுமல்ல
உன் நட்பும் தான்
பிரியும் வேலைதனில்
அழுதது வானம் மட்டுமல்ல
எம் நட்பும் தான்
தொலைந்தது பல்கலைக்கழக
வாழ்வில் இருந்த சந்தோசம்
மட்டும் அல்ல - எம் நட்பும் தான்

SCAN ME

மிக நீண்ட நாட்களாயிற்று
உன்னை நேரில் பார்த்து
காற்றை போல நீ என்
கண்களில் தென்படுவதில்லை
எனினும் இதயத்துடிப்புக்களாக
நம் நட்பின் நினைவுகள்
என் நெஞ்சில் வாழ்கின்றன










ஜெசிக்கா
திருகோணமலை




# பட்டதாரி



ஓடியாடி விளையாட
ஒய்வு இல்லை எம்மவர்க்கு



தூங்க நேரம் இல்லையடா
துன்பத்தில் மிதக்கின்றோம்

கோயில் குளம் செல்வதில்லை
கோபம் தான் எம்மவர்க்கு



சொந்த பந்தம் இல்லையடா
சோகத்தில் வாடுகின்றோம்

கைபேசி இல்லையடா
கதைப்பவரும் இல்லையடா

தொலைக்காட்சி பார்ப்பதில்லை
தொல்லையினால் அழுகின்றோம்



சிறு வயதுக் கனவுகள்
சிதைந்த கதை சொல்லவா....



இளவயதுக் கனவுகளை
இழந்த கதை சொல்லவா...

பட்டம் பெற படி படி என
பட்ட துயர் போதுமடா



பெற்றவர் மனம் குளிர
பட்டதாரியானேன் நானடா





ர. அதிசயா
திருகோணமலை





# இலங்கையும் இன்றைய பட்டதாரிகளும்



இலங்கைத் திருநாட்டின் பிரச்சினைகள் எவையென்ற கேள்விக்கு எமக்கு சிந்தனைக்கு வரும் பதில்களுக்குள்ளே இந்த "பட்டதாரிகளுக்கும் அரசுக்குமான பனிப்போர்" முதன்மையானது. எனது பார்வையில் எமது நாட்டைப் பொறுத்தவரைக்கும் குறிப்பாக தமிழ் மொழி பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் "வேலையில்லா பட்டதாரிகள்" என்ற சொல் மிகப்பரவலாக பாவனையில் உள்ள ஒன்றாக காணப்படுகிறது. இந்தச் சொல்லே பெரும் கேள்விகளையும் சிந்தனைப் பரப்புக்களையும் எமக்குள்ளே திறந்துவிடுகிறது.



1) வேலையில்லாத அல்லது வேலையொன்றை பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் பட்டதாரிகள் என்ற தகுதிக்குரியவர்களா ?

2) வேலையொன்றை பெற்றுக் கொள்ளுமளவுக்கு மாணவர்களை தயார்படுத்தாத பட்டப்படிப்பு மற்றும் பல்கலைக்கழக கல்வியென்பது உண்மையிலே வினைத்திறனானதா ?

3) வெறுமனே எண் கணக்குக்காக மாணவர் உள்ளீர்ப்புக்களை மேற்கொண்டு விட்டு தொழில் உலகுக்கு சரியான முறையில் மாணவர்களை தயார்படுத்தாத கல்வி முறைமை மெச்சக்கூடியது தானா ?

4) பாடசாலை தொட்டு பல்கலை வரைக்கும் இலவசக் கல்வியை நுகர்ந்துவிட்டு மீண்டும் தொழில் ஒன்றையும் அரசிடம் மட்டுமே எதிர்பார்ப்பது முறைதானா ?

5) ஆயிரக்கணக்கான பட்டதாரிகளை வருடாந்தம் உருவாக்கி அந்த மனித வளங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயல் உறுதியற்ற அரசாங்கத்திடம் நாட்டின் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய கரிசனை இருக்கின்றதா ?




6) தொழில்துறை சார்ந்த பல்வேறு கற்கைநெறிகள் பல்கலைக்கழகங்களில் தாராளமாக காணப்பட்டாலும் அத்துறைசார் பட்டதாரிகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி பெயர் சொல்லக்கூடியவாறான தொழில் பேட்டைகள் இல்லாமைக்கான காரணம் என்ன ?

7) அனைத்து தவறுகளுக்கும் அரசாங்கத்தையும் அரச பொறிமுறையையும் மாத்திரம் குற்றம் சொல்லிக் கொண்டு தாய்நாட்டின் மீதான நம்முடைய பொறுப்புடமையை மறத்தல் அறம் தானா?

இத்தகைய ஒன்றுக்கொன்று முரணும் சார்புமான பல்வேறு விடை தெரியா வினாக்கள் மனங்களில் எழத்தான் செய்கின்றன. இவை ஒருபுறம் இருக்கட்டும். பல்கலைக்கழக கல்வியென்பது வெறுமனே பட்டமளிப்புத் தொப்பிகளுக்கும், சான்றிதழுக்குமானது மட்டுமல்ல. பல்கலைக்கழக காலத்தில் எம்மை பல்துறைசார் அறிவுடையவர்களாக, ஆற்றல் உடையவர்களாக மாற்றிக்கொள்ளுதல் அவசியமாகிறது. எமது பாடப்பரப்பு சார்ந்த அறிவு, திறனை தாண்டி தொடர்பாடல், அறிக்கைப்படுத்தல், விரைந்து முடிவெடுக்கும் வல்லமை, தலைமைத்துவம் போன்ற மென்திறன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டியுது இன்றியமையாதது.

பல்கலைக் காலத்திலேயே தொழில் உலகை ஆராய்ந்து அதற்கு தேவையான திறன்களையும், எதிர்காலத்தில் அதிக கேள்வியுடைய தொழில் துறைசார் அறிவை வளர்த்துக்கொள்தலும் மாணவர்களாகிய எமது பொறுப்பாகிறது. இதனூடாக மாத்திரமே போட்டிமிகுந்த தொழில் உலகுக்கு ஈடுகொடுக்கத்தக்கவர்களாக எம்மை தயார்படுத்திக் கொள்ள முடியும். இலங்கையின் எழுத்தறிவு வீதம் மட்டும் உயர்வாக இருந்தாலும் இன்னுமும் எமது கல்விமுறைமை அறிவு, திறனோடு மிகமுக்கியமாக "மனப்பாங்கு" விருத்தியை ஏற்படுத்த தவறிக்கொண்டே தான் இருக்கிறது.

பல்கலைக்கழக பட்டங்களுக்கும், பட்டதாரிகளுக்குமான பிரம்மிப்பு என்பது அதிவேக உலகினில் இனிமேலும் இருக்கப்போவதில்லை. எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் நேர்த்தியோடு சமூகத்தில் சாதகமான மாற்றங்களுக்கு பங்களிக்காத வரைக்கும் பெற்ற பட்டம் "வெற்றுப்பத்திரமே" என்பதை புரிந்து கொண்டு எமது தேசத்தை வளப்படுத்துகின்ற பயணத்தில் "பட்டதாரிகள்" எனப்படுவோர் முன்னோடிகளாக மாற்றுச்சிந்தனைகளோடு சுயதொழில் முயற்சிகளிலும் ஆக்கபூர்வமான பயனுறுதிமிக்க செயற்றிட்டங்களிலும் தமது நேரத்தையும் அறிவையும் முதலிட தயாராக வேண்டுமென்பதே ஒரு முதலாம் தலைமுறை பட்டதாரியாகும் பயணத்தில் இறுதி அவத்தையில் இருக்கும் சாதாரண மாணவனின் பேரவா!





**கேஷிஹன் இளமுருகநாதன்**
BSc(Hons) in Information Systems
Sabaragamuwa University of Sri Lanka



# 18 ஊதாரி பட்டதாரி



மூவி ரெண்டு வருடங்கள் மூச்சு முட்ட கற்று வந்தேன்
கனவுகளோடு மட்டுமல்ல கடன்களோடும்



பட்டம் பெற்று விட்டால் பாரினையே ஆண்டிடுவான்
என்றெண்ணி அம்மாவும்




பட்டத்தோடு பஞ்சமும் பறந்தோடும்
என்றெண்ணி அப்பாவும்

வருடக்கணக்காய் கட்டி வைத்த கனவு கோட்டையில்
சுவருக்கு மட்டும் பாரமாய் மாட்டி வைத்த சான்றிதழ்




வாங்கிய கடனுக்கு வட்டியும் குட்டியுமாய்
எட்டு பத்து லட்சத்தை தாண்டுது



பத்தாக்குறைக்கு வேலை ஒண்டு இருந்தால்தான் தாலி கட்ட
பொண்ணு தருவமெண்டு தாய்மாமன் தூதனுப்ப

வேலை தேடி செருப்போட நானும் தேஞ்சு போய்
முடியுக்கும் வயசு வந்து பழுத்துப் போச்சு போராடி போராடி
மனசுலயும் உடம்பிலும் தென்பும் அற்று போச்சு



இருக்கிற கடனுக்கு கல்யாணம் தான்
இல்லா கேடொன்று

போற போக்கில நானும் ஓர் ஊதாரி
பெயர் கொண்ட இளநிலை பட்டதாரி





சுரேஷ் சுலக்சன்
HND in Bio medical science and
Diploma in optometry

# 19 கண்ணியவான்-3 தோள் கொடுப்பான் தோழன்



விடுதி உரிமையாளரின் வேண்டுதலிற்கிணங்கி சிலர் தங்கள் உறவினர்களின் வீடுகளில் தங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர். ஏனையவர்கள் செய்யும் வழியறியாது திகைத்துக்கொண்டிருந்த வேளையில் அலுவலக நண்பர்கள் சிலர் தங்கள் வீடுகளில் வந்து அவர்களை தற்காலிகமாக தங்கிக்கொண்டு, வேறு நல்ல விடுதிகளை பின்னர் தேடிக்கொள்ளும்படி ஆலோசனை கூறினர். குடும்பம் ஒன்றிற்குள் மூன்றாம் நபர் ஒருவரை உள்ளெடுப்பதற்கு எல்லோரும் விரும்புவதில்லை. அவரவர் வீடுகளுக்குள் ஏற்கனவே பலதரப்பட்ட சிக்கல்கள் இருக்கும். அதை மூன்றாம் நபராய் வருபவர் அறிந்துகொள்வதனையோ அல்லது அவ்வாறான பிரச்சினைகளின் நடுவராய் அந்நபர் இருப்பதனையோ குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் விரும்புவதில்லை. அதிலும் குறிப்பாக பெண்பிள்ளைகள் இருக்கின்ற வீட்டில் வேறொரு ஆண் நபரை உள்ளெடுப்பதற்கு பெற்றோர்கள் அனுமதிப்பதே கிடையாது. இத்தகைய விடயங்கள் பொதுவாக அனைவரும் புரிந்துகொள்ளக்கூடியது தான் ஆனால் விடுதி கிடைக்காதவர்கள் என்ன செய்ய இயலும்? எனவே வேறு வழியற்ற அவர்கள் நண்பர்களின் ஆலோசனைக்கிணங்கி சில நாட்கள் மட்டும் நண்பர்களின் வீடுகளில் தங்குவதற்கு சம்மதம் தெரிவித்தனர். இவ்வாறாக ரத்தினத்திற்கு அடைக்கலம் கொடுக்க முன்வந்தவன் சக அலுவலகதோழன் அன்ரனி. விடுதி விவகாரம் தெரிந்த நாளிலிருந்து தன்னுடைய வீட்டில் வந்து தங்குமாறு ரத்தினத்திடம் சொல்லிக் கொண்டிருந்தான். ரத்தினமும் அன்ரனியும் நீண்ட காலமாக நட்புடன் பழகிவந்தமையினால் அவனது வீட்டிற்கு ரத்தினம் அடிக்கடி செல்வதுண்டு. அதனால் அன்ரனியின் வீட்டில் தங்குவதில் அவனுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இருக்கவில்லை. இருப்பினும் உதவிகளை இலகுவில் பெற்றுக்கொள்ளும் சுபாவம் ரத்தினத்திற்கு கிடையாது. எனவே இன்னும் சிறிது நாட்கள் விடுதியிலிருந்துகொண்டே வேறு ஏற்பாடுகளை செய்ய விரும்பினான். ஆனால் விடுதியிலிருந்த அனேகமானோர் வெளியேற தொடங்கியதும், விடுதி உரிமையாளர் தன்னுடைய இயலாமைகளை ரத்தினத்திடம் கூறி, வெளியேறும் நாள் பற்றி அடிக்கடி அவனிடம் சாடைமாடையாக வினவுவது நாளுக்குநாள் தொடர, இறுதியில் அன்ரனி வீட்டிற்கு செல்ல ரத்தினம் எண்ணினான்.

ரத்தினத்தின் மீது அன்ரனிக்கிருந்த உயர்ந்த மதிப்பினாலும், அவனது ஒரே ஒரு தங்கை அனிதா வேறு மாவட்டத்தில் பட்டப்படிப்பினை தொடர்ந்து வருவதனாலும், அன்ரனியின் பெற்றோருக்கும் ரத்தினம் ஏற்கனவே பரீட்சயமானவன் என்பதனாலும் இந்த யோசனை நிறைவேறியது.

விடுதி வாழ்க்கையை விட அன்ரனியின் வீட்டில், அவர்கள் குடும்பத்தில் ஒருவனாக வாழ்ந்து கொண்டிருந்த நாட்கள் ரத்தினத்திற்கு மிகவும் பிடித்திருந்தது எனலாம். அதற்காக அங்கேயே தங்கிவிடலாம் என அவன் நினைக்கவில்லை.

அலுவலகத்திற்கருகில் வேறு விடுதி எதுவும் கிடைக்காதபட்சத்தில் வாடகை வீட்டிற்காவது சென்று விடலாம் என நினைத்து முயற்சி செய்துகொண்டிருந்தான். வாடகைக்கு வீடு கொடுக்க சம்மதித்த இடங்களில் அவன் நினைத்ததை விட வாடகை பணம் இரண்டு, மூன்று மடங்கு அதிகமாக இருந்தது. ஒருவேளை வசதியான வீட்டுப்பிள்ளையாக இருந்திருந்தால், பணத்தை பற்றி யோசிக்காது அந்த வீடுகளில் தங்கியிருக்கலாம். சேமிப்பையே நம்பி வாழும் நடுத்தரவர்க்கம் அல்லவா? மாதாந்த சம்பளத்தில் கிட்டத்தட்ட அரை மடங்கு பணத்தை வாடகைக்கு கொடுத்தால், ஏனைய செலவுகளுக்கும், அவசரமான தேவைகளுக்கும் என்ன செய்வது எனும் எண்ணம் மனதிற்குள் ஓடிக்கொண்டிருந்தது. காலையில் நேரத்துடன் எழுந்து அலுவகத்திற்கு சென்று வேலைகளை முடித்து மாலையில் வீடு திரும்பும் ரத்தினம் பொழுதுபட்ட பின்னரும், விடுமுறை நாட்களிலும் கூட போதியளவு ஓய்வின்றி ஒரு விடுதியையோ அல்லது வாடகை வீடொன்றையோ பெற்றுக்கொள்ள அவதிப்படுவதனை கூடவே இருந்து பார்த்த அன்ரனி “நீ இங்கேயே தங்கிக்கொள்; எனக்கோ எனது குடும்பத்தாருக்கோ அதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை” என பலமுறை கூறினான். ஆனால், ரத்தினம் அதற்கு உடன்படவில்லை. ரத்தினத்தின் தேடல்களிற்கான பலனாய் வாடகை ஓரளவுக்கு குறைந்த சாதாரண வீடு ஒன்று கிடைத்தது. வாடகை குறைவு என்பதனால் வசதிகளும் அந்த வீட்டில் குறைவாகவே இருந்தது. ஆனால் அவற்றை சமாளித்துக்கொள்ளக்கூடிய பக்குவம் ரத்தினத்திடம் இருந்ததனால், மன நிம்மதியுடன் நண்பன் அன்ரனியின் வீட்டாரிடம் விடைபெற்றுக்கொண்டான். முதலில் முன்பின் அறிமுகமற்றவர்களுடனான விடுதி வாழ்க்கை, பின் நண்பன் அன்ரனி வீட்டில் அவனது வீட்டாருடன் ஒரு வாழ்க்கை, தற்போது யாருமற்ற வீட்டில் தனிமையை துணையாய் கொண்டு ஒரு வாழ்க்கை என இந்த வேலை வாய்ப்பு ரத்தினத்திற்கு பல்வேறுபட்ட அனுபவங்களை கொடுத்தது.

ரத்தினம் வாடகை வீட்டிற்கு செல்லும்பொழுது அவனுக்கு உதவி செய்வதற்காக அன்ரனியும் அவனுடன் சென்றிருந்தான். அன்று இருவரும் தங்கள் வாழ்வில் நடந்த சில முக்கியமான தருணங்களை ஒருவருக்கொருவர்
பகிர்ந்துகொண்டார்கள். அப்போதுதான், குடும்ப வறுமையின் காரணமாக தனது உயர்தர தகைமையுடன் கிடைக்கப்பெற்ற வேலைவாய்ப்பை பயன்படுத்திக்கொண்ட ரத்தினத்திற்கு பட்டப்படிப்பு ஒன்றினை பெற்றுக்கொள்ள இயலவில்லையே எனும் கவலை உள்ளார இருக்கிறது எனும் விடயம் அன்ரனிக்கு தெரிந்தது. அதனாலேயே தனது சகோதரர்களை பட்டதாரிகளாக்கிப் பார்க்க வேண்டும் எனும் கனவு ரத்தினத்திடம் தோன்றியிருக்கிறது என்பதனையும் அன்ரனி அறிந்துகொண்டான். பின் வெளிவாரிப்பட்டப்படிப்பு பற்றி தனக்கு தெரிந்த விடயங்களை ரத்தினத்திடம் கூறினான்.பட்டப்படிப்பு என்பது நம் அறிவை விருத்தி செய்யும்

அதேநேரத்தில், அந்த பட்டப்படிப்புடன் இணைந்ததான வாழ்வியல் மற்றும் தொழில்நுட்பவியல் திறன்களையும் கற்றுத்தேறும் போதே நாம் பெறும் பட்டம் முழுமையடைகிறது. இந்த போட்டி மிகுந்த உலகில் சவால்களை தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ள கல்வியுடன் இணைந்ததாக திறன்களும் இன்றியமையாததாய் இருக்கிறது" என அன்ரனி கூறிய கருத்தினை ரத்தினம் எந்தவித முரண்பாடுகளுமின்றி முழுமையாக ஏற்றுக்கொண்டான்.

அன்றிரவு படுக்கைக்கு சென்றவனுக்கு தூங்கமுடியவில்லை. அன்ரனியுடன் உரையாடிக்கொண்டிருந்த விடயங்களே சிந்தனையில் ஓடிக்கொண்டிருந்தன. வெளிவாரி பட்டப்படிப்பு ஒன்றை மேற்கொள்ள வேண்டும் எனும் ஆர்வம் ரத்தினத்திற்கு தோன்றியது. அதனை தொடர்ந்து "எந்த வகையில் பாடநெறிகளை தெரிவு செய்வது? தன்னுடைய தொழில் துறையுடன் இணைந்ததான பாடநெறிகள் நடைமுறையில் உண்டா? அந்த படிப்பிற்கான செலவுகளை தன்னால் சமாளிக்க முடியுமா? புதிய பிரிவு எப்பொழுது ஆரம்பிக்கப்படும்? தன்னுடைய தொழில் துறைக்கு எந்தவித பாதிப்புமின்றி ஆரம்பிக்கும் கற்கைநெறியை பூர்த்தி செய்ய முடியுமா? அல்லது ஒரேநேரத்தில் இரண்டு படகில் கால் வைப்பது போன்றாகிவிடுமா?" என பல கேள்விகள் அவனுள் தோன்றிக்கொண்டிருந்தன.



ச.பவித்ரா
திருகோணமலை






# மனநலம் ஒரு பார்வை



இன்றைய துரிதமான வாழ்க்கை முறையால், பலருக்கு உடல் நலனுடன் மனநலமும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. உடல் நலத்தில் ஏற்படும் மாற்றங்களை நாம் உடனே கவனித்தாலும், மனநலத்தில் ஏற்படும் பாதிப்புகளை பெரும்பாலும் கவனிக்காமல் தவிர்க்கிறோம். ஆனால் உண்மையில், மனநலம் என்பது உடல் நலத்திற்கு சமமான முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

மனநலக்குறைபாடு என்றால் என்ன? மனநலக்குறைபாடு என்பது ஒருவரின் உணர்ச்சி நிலை, சிந்தனை முறை, நடத்தை மற்றும் தினசரி வாழ்க்கையை பாதிக்கும் ஒரு நிலையாக வரையறுக்கலாம். சிலருக்கு வேறு கருத்துகளும் இருக்கலாம். இது ஒருவரின் குடும்பம், வேலை, கல்வி, உறவுகள் என வாழ்க்கையின் பல பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். சாதாரண மன அழுத்தம் தொடக்கம் சைகோபாத் போன்ற தீவிர நிலைகள் வரை மனநலக் குறைபாடுகள் காணப்படும். இன்னும் தெளிவாகக் கூறினால், நீங்கள் பல தொடர்கொலை திரைப்படங்கள் பார்த்து இருப்பீர்கள் அதுவும் ஒரு மனநலக் குறைபாடு தான். ஏன், ஒரு சிறுவன் எப்போதும் கோபத்தோடு காணப்பட்டாலும், அது கூட ஒரு சிறிய மனநலக் குறைபாடாக இருக்கலாம். மரபியல், நரம்பியல் செயல்பாடுகளில் ஏற்பட்ட குறைபாடுகள், சூற்றுச்சூழல், மனதினை பாதிக்கக்கூடிய அனுபவங்கள் மற்றும் போதைப்பொருள் பயன்பாடு ஆகியவை மனநல குறைபாடுகளுக்கான முக்கிய காரணிகளாகும். உடல்நலத்தில் ஏற்படும் பாதிப்புகளுக்கு சிகிச்சை இருப்பது போலவே, மனநலத்திற்கும் சிகிச்சைகள் இருக்கின்றன. மனநல ஆலோசனைகள், மருந்துகள், குடும்பத்தினரின் ஆதரவு, தூக்கம், நல்ல உணவு மற்றும் உடற்பயிற்சி போன்றவை மனநலத்தை மேம்படுத்த உதவக்கூடியவை. எமது நாட்டில் பெரும்பாலான மக்கள் மனநலப் பிரச்சனைகள் குறித்து தெளிவான புரிதல் இல்லாமல் இருக்கின்றனர். “மனநலம் பாதிக்கப்பட்டிருக்கிறதா?” என்ற கேள்வியையே வெட்கமாக அல்லது அவமானமாக கருதுகிறார்கள். இதனால் பலர் சிகிச்சைக்கு செல்வதில் தயக்கம் கொண்டுள்ளவர்களாக காணப்படுகின்றனர். ஆனால் இன்றைய இளம் சமுதாயத்தினர், மனநலம் குறித்து வெளிப்படையாக பேசத் தொடங்கியுள்ளனர். இது ஒரு நல்ல மாற்றம்.

முடிவில், அறிவும் அரவணைப்பும் தான் மனநலப் பிரச்சனைகளுக்கு முதல் மருந்து. நம்மில் யாருக்காவது மனதில் ஒரு சுமை இருந்தால், தயங்காமல் ஒரு கை நீட்டுங்கள். ஒரு நிமிட உரையாடல், ஒரு சிரிப்பு, ஒரு கேள்வி யாரோ ஒருவரின் மனதில் நிம்மதியை ஏற்படுத்தலாம். ஒருவரின் மனநலம் என்பது தனிநபரின் பொறுப்பல்ல. நாம் அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டிய பொறுப்பாகும்.





ந.பிரநீதன்
திருகோணமலை

# 21 எழுத்துச்சதுரங்கம்

தளம் அமைப்பினால் நடாத்தப்படும் "குறுக்கெழுத்து போட்டி" வெற்றியாளர் எமது அடுத்த இதழ் வெளியீட்டின் போது அறிவிக்கப்படுவார்.



15.05.2025 இற்கு முன்னர் தெளிவான புகைப்படம் மூலம் உங்கள் விடைகளை அனுப்பி வைக்கவும் முதல் வரும் ஒரு வெற்றியாளருக்கே பரிசு வழங்கப்படும்.

## கீழிருந்து மேல்

1- வாழ்க்கை வாசிக்க மறந்தது (வெற்றிடமான கனவுகள் கவிதை)
5- எழில் இலக்கணத்தில் எந்த வகையைச் சேர்ந்த சொல்
6- கடவுள் என்ற சொல்லில்..உயிர் எழுத்துக்கள் மறைந்துள்ளன
7- அனுபவத்தின் தமிழ் வடிவம்(....வு)
9- தோழன் வேறு சொல்
10- திறமை என்று பொருள்படும்
17- இராமன் சீதை இடையே இருந்தது

## வலமிருந்து இடம்

1.அதீத அழகை குறிக்கும் சொல்
3.நெதர்லாந்தின் தாய் மொழி(தமிழில்)
6.காற்றின் வேகம் அறிய உதவும் இயற்கையின் வடிவம்
7.உள்ளீடு அற்ற நெல் முதலிய நாற்று அழைக்கப்படுவது
11.தினம் தினம் நீண்டு செல்வது (கலைந்துள்ளது) (தனிமையில் வெளியூர் பல்கலைக்கழக மாணவர் கவிதை)
15.மூ வகை வேதங்களில் ஒன்று
16.குவலயம் வேறு சொல்

## மேலிருந்து கீழ்

2.இராமாயனத்தில விதேக நாட்டின் தலை நகரம்
6.பூ.../ உதடு, ஒரு அச்சு வெளியீடு என்பவற்றை குறிக்கும் சொல்
12.கோவலனின் காதல் தேவதை
13.கந்தன் சூரபத்மனை வதம் செய்தது...போர்

## இடமிருந்து வலம்

1.விருட்ச்சம் தளை 11 வெளியிட்ட மாதம்
4.திருமணமான ஆணைக்குறிப்பது
7.இலங்கையில் உள்ள அரசு பல்கலைக்கழகத்தின் எண்ணிக்கை(...மு)
8.சோழர்களின் தலைநகரம்
11.தனிமையில் தேடுவது (தனிமையில் வெளியூர் பல்கலைக்கழக மாணவர் கவிதை)
15.அறிவுடையோன் பெறுவது
16.ஒரே எழுத்து இரண்டு முறை வரும் ஒரு பொருள் தரும்
17.ஆபத்தில் அரணாகி நிற்பவர்

**அனுப்பி வைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் 077 624 3212 (whatsapp)**




# தளத்தின் எதிர்கால திட்டங்கள்

1. இளையோரின் திறன்விருத்திக்காக விடியல் 5.0 திறன் விருத்தி செயற்றிட்டம் தொடங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.



2. நேரடி அமர்வுகளில் பங்குபற்ற இயலாத இளையோரினை கருத்திற்கொண்டு வாராந்தம் நிகழ்நிலை அமர்வுகள் இடம்பெற திட்டமிடப்பட்டுள்ளது.

3. இளையோரின் செயற்கை நுண்ணறிவு தொடர்பான திறமையை வெளிக்கொணரும் பொருட்டு செயற்கை நுண்ணறிவு தொடர்பான போட்டிகள் இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

4. திருமலை வெளியீடு எனும் அடிப்படையில் மாதாந்தம் 3வது வாரத்தில் விருட்சம் இதழ் வெளியிடப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.



5. பாடசாலை மாணவர்களின் வழிகாட்டல் மற்றும் திறன்விருத்தி சார்ந்து ஊக்குவிக்கும் பொருட்டு பாடசாலைகளில் அமர்வுகள் நடாத்தப்பட தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



6. திருமலை இளைஞர்களுக்கு உயர் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் தொடர்பான விண்ணப்பப்படிவங்களை பெற்று கொடுப்பதோடு தனியார் துறை வேலை வாய்ப்புகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றது.



தளம்
THALAM

# Feedback

புதிய படைப்பாளிகளை உருவாக்கி, அவர்களின் திறமையை வெளிக்கொணர்வதில் தன்னலமின்றி பணியாற்றும் “விருட்சம்” திருமலை இலக்கிய அரங்கில் ஒரு பிரமாண்டமான பயணத்தைத் தொடர்கிறது.

இளைஞர்கள் மத்தியில் ஒளிந்து இருக்கும் எழுத்தாற்றலை தேடிப் பிடித்து, அதன் ஒளியை உலகிற்கு பரப்பும் இந்த தளம், 11 வெளியீடுகளை வெற்றிகரமாக கடந்தும், இப்போது அதன் 12 வது வெளியீட்டுடன் நம்மைச் சந்திக்கிறது.

இந்த முறை, கலைதுறையை மட்டுமல்லாது, சமூகவியல் நோக்கில் பட்டதாரிகளின் தொழில் சார்ந்த பிரச்சனைகள், தொழில் சந்தையின் வெற்றிடங்கள், வாய்ப்புகள் மற்றும் வரையறைகள் குறித்து ஆழமாக ஆராய்கின்றது.

இன்றைய இளைஞர்களுக்கு தேவைப்படும் தன்னம்பிக்கையும், தெளிவும், நம்பிக்கையும் விதைக்கின்ற “விருட்சம்” வேரூன்றி வளர வாழ்த்துகள்!

அ . பிராங்கிளின்
வளவாளர் & சமூக செயற்பாட்டாளர்

விருட்சம்
கிளை 2024
தளை 1

விருட்சம்
கிளை 2024- 2025
தளை 12

# அடுத்த மாத இதழுக்கான தலைப்பு




## “இன்றைய உலகில் செயற்கை நுண்ணறிவு”



# விருட்சம்

தளம்
THALAM

## இதழாசிரியர் குழாம் விபரம்



**தலைமை ஆசிரியர்**
அதிசயா ரவீந்திரன்



மகாலிங்கம் டிலானி



ரவீந்திரன் லக்சியா



அமலதாசன் யதுஷினி



மேரி ரஜனட் நோபட் சேவியர்



நவநீதன் பிரநீதன்



நவநீதன் பிரதீஷன்

எமது மண்ணுக்காய் தளத்தின் குரல்
எப்பொழுதும் ஒலித்துக்கொண்டே இருக்கும்!